**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI</u>**

O.S No. 214 of 2022

Deposition of P.W. 2

Name of the Witness: திரு.சுகுமாரன்

Date : 04.02.2026

**<u>குறுக்கு விசாரணை</u>**

நாள் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். தாவா சொத்து கோமாளிபட்டி கிராமத்தில் உள்ளது. நான் செங்கல்பட்டி கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தாவா கிராமத்தில் 49 வருடமாக கோமாளிப்பட்டி கிராமத்தில் வசித்து இருப்பதாக சொல்லியிருந்தால் அது தவறு. கோமாளிப்பட்டி என்னுடைய பூர்வீகம். தாவா சொத்துக்கள் ஆதியில் கண்ணுகவுண்டரின் அப்பா பெயரில் இருந்தது. கண்ணுகவுண்டரின் அப்பா பெயர் தெரியாது. ஊரில் விசாரித்த போது கண்ணுகவுண்டர் அவரது மகள்களுக்கு தெரியாமல் மகனுக்கு எழுதி கொடுத்துவிட்டதாக சொன்னார்கள். ஆனால் இதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்தின் மொத்த பரப்பளவு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து விவரத்தில் எத்தனை சர்வே எண்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது.

2) சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தில் வாங்கியது எனக்கு தெரியாது. கண்ணுகவுண்டரின் மகள்கள் பாகம் கேட்டது மட்டும் தெரியும். தாவா சொத்துக்கள் கொஞ்ச நாட்கள் கூட்டாக அனுபவித்ததாக சொன்னார்கள், எனக்கு நேரடியாக தெரியாது. தற்போது தாவா சொத்தில் மலர், கந்தசாமி, கருணாநிதி விவசாயம் செய்து வருகிறார்கள். தாவா சொத்துக்களின் வருவாய் துறை ஆவணங்கள் எதையுமே நான்

பார்க்கவில்லை. கூட்டு குடும்ப வருமானத்தை கூட்டு குடும்ப உறுப்பினர்கள் பாகம் பிரித்து கொண்டதை நான் பார்த்ததில்லை. கண்ணுகவுண்டரிடம் வாதிகள் சென்று பாகம் கேட்ட போது பாகம் முடிந்து விட்டதாக சொன்னார். பின்னா் வாதிகளுக்கு பாகம் ஏற்பட்டது தெரியவந்தது. 1993ல் ஒரு பாகபிரிவினையும், 2002ல் ஒரு பாகபிரிவினை ஏற்பட்டுள்ளதை பற்றி தான் எனக்கு தெரியும். எனக்கு தெரிந்து 1993லே பாகபிரிவினை ஏற்பட்டு அவர் அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வில்லங்க சான்றிதழை பார்த்த போது தான் சொத்துக்களை வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கிய விவரம் தெரிய வந்தது. அதன் விவரங்கள் எனக்கு தெரியாது.

3) 2018ல் யார் யாருக்கு குத்தகை விட்டார்கள் என்று தெரியாது. 08.02.2017 அன்று 7ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி 10ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் எழுதி கொடுத்ததாக கேள்விபட்டேன். அந்த விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. 10ம் பிரதிவாதி ஜெயசூர்யா யார் என்று எனக்கு தெரியாது. 9ம் பிரதிவாதி புனிதா யார் என்று எனக்கு தெரியாது. மலரின் மகன் அழகிரி. கந்தசாமியின் மகன் புகழேந்தி. கந்தசாமியின் மனைவி பாஞ்சாலை.

4) தாவா சொத்துக்களை 1993ல் பாகம் பிரித்து கொண்டு வருவாய் துறை ஆவணங்களை அவர் அவர்கள் வருகிறது என்றால் சரிதான். 2002லும் பாகம் பிரித்து கொண்டுள்ளார்கள். 1993ல் பாகம் பிரித்து கொண்ட பிறகு 2002ல் அவர்கள் பாகம் பிரித்து கொண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆனால் பெண்கள் பாகம் கேட்டார்கள். பெண்கள் 2022ல் பாகம்

கேட்டார்கள். பாகம் கேட்ட போது நான் போகவில்லை. வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.